# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,083 — 1934 ம் ஹூ ஐப்பசிமீ 12 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

*வேலையாட்கள் காரியப் பகுதி.*

*இந்திய வேலையாட்களைப்பற்றிய 1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்.*

*150 ம் இலக்க விளம்பரம்.*

1933 ம் ஆண்டு எப்பிறில் மாசம் 7ந் தேதியைக்கொண்ட 7,975ம் இலக்க "கெசெற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்பட்ட,1933ம் ஆண்டு எப்பிறில் மாசம் 7 ந் தேதியைக்கொண்ட 93ம் இலக்க விளம்பரத்தில் விபரிக்கப்பட்ட ஆகக் குறைந்த சம்பள வீதங்களின் விஷயத்தில், தோட்டச் சம்பளக் காரியசபைகளால் விதிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வந்து குடியேறும் வேலையாட்களைக் குறித்த காரியங்கள் பார்க்கும் சங்கத்தாரால், 1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்கள் சட்டத்தின் 8 (4) ம் பிரிவின்படி நியமிக்கப்பட்டதும், இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் இடாப்பிற் காட்டியிருப்பதுமான மாற்றத்தை, இலங்கை இராச்சிய மந்திரி சபை சம்பந்தமாக 1931 ம ஆண்டில் ஆலோசனைச் சபையில் செய்த கட்டளையின் 93 ம் அம்சத்தினால் தம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு தேசாதிபதியவர்கள் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அங்கீகரித்திருக்கிறார்கள்.

தேசாதிபதியவர்கள் கட்டளைப்படி,

பெரி. சுந்தரம்,
வேலையாட்கள், கைத்தொழில்
வர்த்தக கருமங்களினது மந்திரி.

கொழும்பு,
1934 ம் ஆண்டு ஒக்ரோபர் மாசம் 12 ந் திகதி.

*இடாப்பு.*

*குறிக்கப்பட்ட இடப்பர வகுப்பின் மாற்றம்.*

1. 1933 ம் ஆண்டு எப்பிறில் மாசம் 7 ந் தேதியைக்கொண்ட "கெசெற்" றில் பிரசித்தப்படுத்தப்பட்ட 93 ம் இலக்க விளம்பரத்தின் இடாப்பில் மேல்நாடு, மத்திய நாடு, கீழ்நாடாக வகுக்கப்பட்ட எல்லாத் தோட்டங்களுக்கும் புதுப்பிக்கப்பட்ட வீதச் சம்பளங்கள் பின்வருமாறு :—

| | | ஆண்கள். சதம். | | பெண்கள். சதம். | | பிள்ளைகள். சதம். |
|---|---|---|---|---|---|---|
| (a) மேல்நாடு | .. | 49 | .. | 39 | .. | 29 |
| (b) மத்திய நாடு | .. | 43 | .. | 35 | .. | 25 |
| (c) கீழ்நாடு | .. | 41 | .. | 33 | .. | 24 |

2. புத்தளமும் சிலாபமும் அரசிறை வருமானப் பகுதியின் எல்லைக்குட்பட்ட எல்லாத் தோட்டங்களுக்கும், கீழ்நாட்டுத் தோட்டங்களுக்கு புதுப்பிக்கப்பட்டிருக்கும் வீதங்கள், குறிக்கப்பட்டிருக்கின்றன.

3. கண்டி அரசிறை வருமானப் பகுதியின் எல்லைக்குள் வகுக்கப்பட்டிருந்த தம்பவிட்டா தோட்டத்திற்கு கேகாலை அரசிறை வருமானப் பகுதிக்குட்பட்ட மத்திய நாட்டுத் தோட்டங்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், கொடுபடும்.

4. மாத்தளை அரசிறை வருமானப் பகுதியின் எல்லைக்குள் முன் மத்திய நாடாக வகுக்கப்பட்ட பெல்லிகாமா தோட்டத்துக்கு இப்போ புதுப்பிக்கப்பட்டிருக்கும் வீதம், இந்த எல்லைக்குள் அடங்கிய கீழ்நாட்டுத் தோட்டங்களுக்கு புதுப்பிக்கப்பட்டிருக்கும் வீதத்தின்படி, கொடுபடும்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

**1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓர் இலவச பகிரங்க வாசிகசாலையைக் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—**

*பிரதமபடத்து இல. A 383. குறிச்சி—பட்டியா வடக்கு.*

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | உவாட் இல. 2, சோலை வர்இல. 306, தனைய மலங்கவத்தை .. | ஏறக்குறைய 60 வயதுள்ள 1 ஈரப்பலா மரத்தின் அரைவாசி, 6 வாழைமரங்களடங்கிய கூட்டம், ஒரு உறுதியான கட்டடம் அடங்கிய தோட்டம் | கொழும்பு, நொ. 3, கிறீன் இஸ்றீற்றைச்சார்ந்த பீ. டி. அல்விஸ் | 0 | 0 | 5·27 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | உவாட் இல. 2, சோலை வரிஇல. 305, தனைய மலங்கவத்தை .. | 15-50 வரையில் வயதுள்ள 17 தென்ன மரங்கள், ஏறக்குறைய 8 வயதுள்ள 2 ஈரப்பலா மரங்கள், ஏறக்குறைய 60 வயதுள்ள ஒரு ஈரப்பலாமரத்தின் அரைவாசி, ஏறக்குறைய 8 வயதுள்ள 2 மாமரங்கள், ஏறக்குறைய 8 வயதுள்ள 3 கமுகமரங்கள், ஏறக்குறைய 1 வயதுள்ள 2 பப்பாசிமரங்கள், 7 வாழைமரங்கள், ஒரு உறுதியான கட்டடம், ஒரு உறுதியான மலசலகூடம், ஒரு மேசன்வேலை செய்த கிணறு, சுவர்களின் பகுதிகள் அடங்கிய தென்னந்தோட்டம் | பாணந்துறை வலானைவைச் சார்ந்த டீ. ஏ. பர்னாந்து, பாணந்துறையைச்சார்ந்த டீ. சாள்ஸ் பர்னாந்து, பாணந்துறையைச்சார்ந்த எச். செலஸ்தீனு பர்னாந்தின் சீவிய உரித்துடன், பாணந்துறையைச்சார்ந்த டீ. இடி பர்னாந்துவும், எச். ஆர். நோலிஸ் நோனிஸ்சும் ஒருமித்து | 0 0 23·55 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ கார்த்திகை மாசம் 3 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1934 ம் ௵ ஐப்பசிமீ 9 ௳.

ஜே. லேற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

## டிஸ்திறிக் ஹ்ரேட் கொம்மிற்றி அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தலைப்பற்றிய அறிவித்தல்கள்.

இத்தாலறிவிக்கிறதாவது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1935, 1936, 1937 ம் ஆண்டுகளுக்கு தம்பங்கடவை டிஸ்திறிக் ஹ்ரேட் கொம்மிற்றியின் அங்கத்தவர்களாக வரும் உத்தியோகத்தைக் கேட்க நினைக்கும் யாபேரும் தங்கள் எண்ணத்தைத் தெரிவு நாட்களுக்குப் பத்து நாளைக்கு முன்னே வடமத்திய மாகாண பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்திலறிவிக்கவேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின்படி தம்பங்கடவை டிஸ்திறிக் ஹ்ரேட் கொம்மிற்றிக்கு மூன்று அங்கத்தவர்களை 1934 ம் ஆண்டு கார்த்திகைமீ 14 ந் திகதி, சாயந்தரம் 2 மணிக்கு தோப்பாவை கிராம கோட்டில் தெரிவு செய்யப்படும்.

எல். எல். ஹண்டர்,
பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றிக் கந்தோர்,
அநுராசபுரம், 1934 ம் ஆண்டு ஐப்பசிமீ 8 ந் தேதி.

---

இத்தாலறிவிக்கிறது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1935 ம், 1936 ம், 1937 ம் ஆண்டுகளுக்கு நுவரகாளாவி டிஸ்திறிக் ஹ்ரேட் கொம்மிற்றியின் அங்கத்தவர்களாக வரும் உத்தியோகத்தை கேட்க நினைக்கும் யாபேரும் தங்கள் எண்ணத்தைத் தெரிவு நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்னே வடமத்திய மாகாணப் பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்திலறிவிக்கவேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின்படி நுவரகாளாவி டிஸ்திறிக் ஹ்ரேட் கொம்மிற்றிக்கு மூன்று அங்கத்தவர்களை 1934 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் திகதி சாயந்தரம் 2 மணிக்கு அநுராசபுரக் கச்சேரியில் தெரிவுசெய்யப்படும்.

எல். எல். ஹண்டர்,
பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறவின்சியல் ஹ்ரேட் கொம்மிற்றிக் கந்தோர்,
அநுராசபுரம், 1934 ம் ஆண்டு ஐப்பசிமீ 8 ந் தேதி.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

### 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவிற் காட்டிய 1 ம் செடூலின் B பிரிவின்படி அறிவித்தல்.

மட்டக்களப்பு தாமரைக்கேணியிலிருக்கும், ஜேம்ஸ் ஆறுமுகம் சபாபதியாகிய நான், என்னை மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலே, கருங்கொட்டித்தீவிலே, தமிழ்ப் பாஷையிலே வேலைபார்க்கும் நொத்தாரிசுவாக நியமிக்கும்படி; பதிவுக் காரியத் தலைவரவர்களுக்கு 1934 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ந் திகதிக்குப்பின் விண்ணப்பிக்க எண்ணியிருக்கிறேன் என இதனாலறிவிக்கிறேன்.

தாமரைக்கேணி, மட்டக்களப்பு, ஜே. ஏ. சபாபதி.
1934 ம் ௵ புரட்டாதிமீ 6 ந் ௳.

---

திரிகோணமலையிலிருக்கும் சின்னப்பிள்ளை சேத்திரப்பிள்ளையாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டம் 6 ம் பிரிவின்படி தமிழ்ப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக திரிகோணமலை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கொட்டியாபுரப்பற்று தம்பலகாமப் பற்றுகளுக்கு மூதூரில் கந்தோரும் இருப்பிடமும் சின்னக்கிளியாவிலோர் கந்தோரும் வைத்து வேலை நடத்த எத்தனித்திருக்கிறேனென்று மூன்று மாசத்தின்பின் பதிவுகாரியகர்த்தருக்கு விண்ணப்பஞ்செய்வேனென்பதை யறிவிக்கின்றேன்.

சி. சேத்திரப்பிள்ளை.

திரிகோணமலை,
1934 ம் ஆண்டு வைகாசிமீ 5 ந் ௳.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO